ஓம் சரவணஜோதியே நமோ நம

மகான் ஆறுமுக அரங்கமகானின் கார்த்திகை முழுமதி விழா ஆசி நூல்

24.11.2026

1. ஆனந்த நடனமிட்ட ஈசன் பாதம்
அடிவணங்கி அரங்கன் யான் அருளாசி
வரமாக ஓங்காரக்குடிலின் நிர்வாகத்திற்கும்
அன்னதானத்திற்கும் தொண்டர் பெருமக்கட்கும்

2. உலகளாவிய மக்களின் நலங்கட்கும்
இனிதே அரங்கன் யான் பராபவ ஆண்டு
கார்த்திகை திங்கள் பௌர்ணமி பூஜை பலனாகவும்
பௌர்ணமியின் ஆசி விளக்கமாகவும் தர வருகின்றேன்

3. அச்சமற அரங்கன் என் குடிலில்
நிர்வாகத்தின் சிறப்போடு இனிதே
நடந்த பூஜையும் வழிபாடும் தர்மமும் சிறப்பு
இந்த அன்னதானத்தை அரங்கன் யான்

4. பரிபூரணமாய் ஜோதியாய் நின்று கண்டு மகிழ்ந்து
நிர்வாகத்திற்கும் அன்பர்கட்கும் உழைக்கின்ற
தொண்டர் பெருமக்கட்கும் உலகளாவி வந்த
உலக மக்கள் அனைவருக்கும்

5. இனிதே அரங்கன் யான்
ஜோதி ரூபில் ஆசி தந்தேன்
கார்த்திகை திங்கள் பௌர்ணமி பூஜை
உலக ஞானியர்களெல்லாம்

6. ஒன்று சேர்ந்து வந்து
ஓங்காரக்குடிலை கண்காணிக்க இனிதே
விழா சிறப்பாக நடந்தேறியுள்ளது
உள்ளபடி இவ்விழாவில் ஞானியர்களோடு

7. ஞானபண்டிதன் ஆறுமுகனும் சூட்சுமமாக
மணமாக வாசனையாக வந்து
ஆசியும் காட்சியும் தந்துள்ளார்
உள்ளபடி இவ்வித நன்னாளில்

8. ஓங்காரக்குடிலின் அருளமுது உண்ட
மக்கட்கெல்லாம் பசிப்பிணி வாராத வண்ணம்
பிணி சோடை பிற இன்னல்
அணுகாத வண்ணம் ஆக்க எதிர்வினை

9. சக்திகள் வழி சிக்கல் வாரா வண்ணம்
சர்வ பாதுகாப்பு உண்டு உண்டு
உத்தமமாய் அருமருந்தாக்கி அரங்கன் யான்
விழா நாளில் தர்மத்தில் சக்தி கூட்டியுள்ளேன்

10. உள்ளபடி பூஜையும் விழாவும்
உயர்வான தர்மமும் மிகச்சிறப்பு
வல்லமை கொண்டு இந்த சேவையாற்றுகின்ற
நிர்வாக மற்றும் தொண்டர் பெருமக்கள்

11. அனைவருக்கும் அரங்கன் யான்
பாதுகாப்பாய் உள்ளேன்
தொண்டர் பெருமக்களெல்லாம்
ஒற்றுமை கூட்டி இனிதே

12. அரங்கன் என் பால்
முழுசரணாகதியில் இருப்பதாலே
அவர்களோடு அவர்கள் குடியவர்க்கும்
அவர்கள் நலம் விரும்பும் அனைவருக்கும்

13. ஆசியும் வரமும் தந்து வருகின்றேன்
மிகைபட என் குடிலில் மேலான
பொருளாதாரத்தில் அன்னதான சேவைக்காக
பங்களிப்பு செய்து வருகின்ற அனைத்து

14. உலகளாவிய வண்ணம் உள்ள
அன்பர்கள் அனைவருக்கும்
அரங்கன் யான் அவர்கள் இருக்கும்
இடமே சென்று சூட்சுமமாய் ஆசி தருகின்றேன்

15. ஜோதி ஏற்றி என்னை வணங்கும்
அனைத்து தரப்பிலும் அந்த ஜோதியுள்
இறங்கி அரங்கன் யான் அற்புதம் நடத்துகின்றேன்
மலேசியாவில் இருந்து வந்த மக்களுக்கும்

16. அரங்கன் யான் சர்வ பாதுகாப்பு தந்துள்ளேன்
உள்ளபடி அனைத்து கிளைசங்கங்களும்
ஓங்காரன் என் ஆசியோடு இனிதே பாதுகாப்பாய்
நடந்தேற ஆங்காங்கே நடக்கின்ற தர்மங்களும்

17. தொண்டும் ஓங்காரக்குடிலை நோக்கி
அவர்கள் கொண்டுள்ள சரணாகதியும்

மேலும் வலுப்பெற்று இனிதே
குடிலின் செயல்பாடுகள் உலகளாவிய

18. வண்ணம் வளரவும் ஓங்காரக்குடிலின்
சன்மார்க்கம் உலகமெங்கும் நிரம்பி
உலகையே ஆளும் வண்ணம்
மாற்றம் கொள்ளவும் அரங்கன் என்

19. பரிபூரண ஆசி உண்டு
ஆசி தந்தேன் இனிதே
தர்மத்தின் பலத்தோடு
அன்னதானத்தின் கிராம செயல்பாடுகளெல்லாம்

20. இன்னும் விரிவடையும் வண்ணம்
அதற்குண்டான பொருளாதார பலமும்
அன்பர்கள் மனம் மகிழும் வண்ணம்
நிர்வாகமும் இனிதே வழிநடத்த

21. அரங்கன் யான் பெருந்துணை புரிகின்றேன்
வல்லமை கொண்டு அவரவர்க்கு
ஆரோக்கியம் ஆயுள் பலம்
தொண்டாற்றும் உள்ளங்கள் அனைவருக்கும்

22. மகிழ்வும் நிறைவும் அவர்கள் குடிக்கு
பாதுகாப்பும் அரங்கன் யான் தருகின்றேன்
வல்லமை கொண்ட ஒவ்வொரு பௌர்ணமி
பூஜையுமே உலகோர்க்கு வரமாக மாற்றம் கண்டு

23. தொடருகின்ற ஒவ்வொரு முழுமதியிலும்
இன்னும் சக்தி அதிகமாகி
உலகமே ஞானலோகமாக
மாற்றம் கொள்ளும் காலம் சடுதி

24. அரங்கன் என் ஆசியோடு ஞானியர் படைகளும்
என் சீடர்களாகவே வருங்காலம் உருவாகி
அற்புதம் நிகழ்த்துவர் என் சீடர்கள்
ஆங்காங்கே கிளைச்சங்கங்கள் மற்றும்

25. விழாக்காலங்களில் சொல்கின்ற
வார்த்தைகளெல்லாம் சித்தியாகி
அவர்களெல்லாம் எதிர்காலத்தை
உணரும் ஞானிகளாகவே

26. ஆக்கம் பெறும் வண்ணம்
அற்புதம் நிகழ்த்துவேன்
தொண்டர் பெருமக்கட்கும்
நிர்வாக அன்பர்கள் பெருமக்கள் அனைவருக்கும்

27. என் பாதுகாப்பு பரிபூரணமாய் உண்டு உண்டு
அரங்கன் யான் அருளிய
கார்த்திகை திங்கள் முழுமதி
ஆசி விளக்கம் முற்றும் முற்றே.

–சுபம்–

ஓம் முருகப்பெருமான் திருவடிகள் போற்றி போற்றி